# CENTRISM

- Centrism is not moderate but rather supports strength, tradition, open-mindedness and policy making based on evidence not ideology.
- Centrism is not about compromise but rather allows it when deemed reasonable.
- Centrists are independent thinkers. They gauge situations based on context and reason, consideration and probability.
- Centrists are open-minded and exercise conviction. They are willing to fight for reason as opposed to ideology.
- Centrist conviction is not limited by ideology as they believe ideology limits the capacity of reasoning. The adopt reasoning that is based on pragmatic reality and circumstance.
- Centrists tend to believe that if we dealt with the facts and concentrated on working together we could fix a lot more problems than two polar, opposite parties constantly embattled in their own agendas and ideologies.
- Centrism is not about doing what is popular, it is about doing what is right.



# மய்யம்

நடுவுநிலைமை என்பது மிதவாதமல்ல. மாறாக, வலுவான சிந்தனைக்கு வலு சேர்ப்பது.

மரபை மதிப்பதோடு, பகுத்தறிந்து திறந்த மனதுடன் பரந்த நோக்குடன் ஆதாரத்தின் அடிப்படையில், கொள்கை வகுப்பது. சித்தாந்தத்திற்குள் மட்டுமே சிக்குண்டதல்ல நடுவுநிலைமை.

நடுவுநிலைமையின் அடிநாதம் சமரசமல்ல, அது தேவையை/காரணத்தை ஆய்ந்து சமரசத்தை அனுமதிக்கும் நிலைமை. நடுவுநிலைமையாளர்கள், சுதந்திரச்சிந்தனையாளர்கள். சூழலைக் கணித்து, காரணத்தையும் நிகழ்ந்தவைகளையும் கருத்தில் கொண்டு செயல்படுபவர்.

திறந்த மனப்பாங்கு அனைத்தையும் ஏற்பதல்ல. பகுத்து அறிந்து அரவணைப்பதே.

கொள்கைக்கும் திட்டத்திற்கும் உள்ள வேறுபாட்டை உணர்வதே நடுவுநிலைமை. கொள்கை நல்ல திட்டங்களுக்கு இடையூராகாது. கொள்கை,மக்கள் நலத் திட்டங்களை வகுக்க வேண்டுமே அன்றி தடுக்கக்கூடாது என்பதில் திண்ணமாக இருப்பர் நடுவாளர்.

கூடி ஆலோசித்து, மனித முன்னேற்றமே மூல இலட்சியமாக நகர்ந்தால் தீராப்பிரச்சனைகளும் தீரும்.

கொள்கைப் போரில் ஈடுபட்டு, உலகத்தையே தாமதப்படுத்தும் இரு துருவ அரசியலுக்கு மாற்றே நடுவுநிலைமை. யதார்த்த நிஜங்களும் சூழலுமேநடுவாளர்களின் செயல் காரணங்களாக இருக்கும்.

நடுவாளர்கள் விரும்பப் படுவதை மட்டும் செய்வதல்ல, மக்களுக்கு தேவையானதையும் சரியானதையும் செய்வதே.

